# The One That Transcends the Two -- Avvai's |Personality -- is a Comparative Perspective

**Dr. N. Siva**
*Assistant Professor, Thiruthangal Narar College*
*Selavayal Chennai*

**Abstract**

*There is a global trend that men's literature is higher in quality, opinion and appreciation than the literature written by women. But it is evident from their literature that women have produced literature that is equal to or even more special than that of men. Therefore, this article tries to analyze the fact that Auvaiyar's Athichudi and Konrai Vendan, which have one foot, are more direct and close to all people than the two-footed Thirukkural.*

***Keywords :*** *Hirakata, Thiruvalluvar, Kural, Aathisoody, Konrai Vendan, Avvai, Avviam*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2026**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358340

**References**

1. Agathialingam, Sa, Thirukuraluru, Sociological Perspective, Manivasakar, Publisher, Chidambaram, 2005.
2. Appadurai, K, Thirukkural a Social Perspective, World Tamil Research Institute, 1983.
3. Geetha, Va., A Feminist Perspective in Thirukkural, Kalachuvadu Publishing House, 1997.
4. Tamilannal, Sculptors of Indian Literature – Auvaiyar, Sahitya Akademi, 1998
5. Subparayan, S., Valluvam and Social Justice, Bari Station, Chennai, 1972.
6. Puliyur Kesigan, Tirukkural New Text, Poombukar Publishing House, 2010.
7. Venkata Sami Nattar, N.M., Neeti Texts Student Edition, Chennai, 2004.

# இரண்டை விஞ்சிய ஒன்று – ஔவையின் ஆளுமைத் திறன் – ஓர் ஒப்பியல் நோக்கு

*முது முனைவர் நா. சிவா*
உதவிப் பேராசிரியர், திருத்தங்கல் நாடார் கல்லூரி
சேலவாயல், சென்னை

*உலகம் தோன்றிய நாள் தொட்டு மனித இனம் ஆண் பெண் என்ற இரு உயிரிகளால் உருவாக்கப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. இதிலே பெண்தான் முதன் முதலில் தாய்த்தலைமை சமுதாயத்தை ஏற்று, நன்கு வழி நடத்தினாள் என்று வரலாறு கூறுகின்றது. ஆனால் காலப்போக்கில் நிலவுடைமைச் சமுதாயமும் போர்க்கால சமுதாயமும் காலூன்றியபோது அனைத்துப்பொருள்களும் ஓரிடம் குவியத் தொடங்கின. அவற்றைத் தலைமை ஏற்று வழிநடத்தத் தெரிந்தவன் ஆண்தான் என்ற பொய்யான கட்டமைப்பு நம் சமூகத்தில் உலகமெங்கும் நிலைநிறுத்தப்பட்டன. இந்நிலையில் மொழி தோன்றிய பல ஆண்டுகளுக்குப் பிறகு, இலக்கியங்களைக் கூடத் தலைமை ஏற்று நடத்த ஆணினமே தகுதி வாய்ந்தது என்பதை முச்சங்க வரலாறும் மெய்ப்பிக்கின்றது.*

*இருந்தாலும் பெண்களும் இலக்கியத்தை ஆளுமை செய்வதில் இளைத்தவர்கள் அல்லர் என்று மெய்ப்பிக்கும் வகையில் பெண் தனது இலக்கிய ஆளுமைத்திறனை ஆண்களுக்கு நிகராகப் படைத்தனர். ஆராயப்புகின் ஆண்களைவிட ஒருபடி விஞ்சியே அவர்கள் இலக்கியங்களைச் சமைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இற்றை நாள் தொட்டுவரை காண முடிகின்றது. ஆண் தனது ஆளுமையை, அதிகாரத்தைச் சமூகத்தில் எவ்வாறு நிலை நிறுத்தினானோ அதைப் போன்று அவன் இலக்கியங்களில் பெண்ணையும் அடிமைகொள்ள முற்பட்டான். அனைத்திலும் சிறந்தவன் ஆண்தான் என்ற ஒரு செருக்கு ஆணுக்கு எழுந்தது. இலக்கியம் எழுதவோ படிக்கவோ பெண் தகுதியற்றவள் என்ற போக்கு பெண்ணியப் படைப்பாளி பிரபஞ்சன் காலம்வரை நீண்டுகொண்டே வந்திருக்கின்றது. பெண்கள் ஊர்க்குருவிகள். உயரே உயரே பறந்தாலும் அவை பருந்துகள் ஆகாது என்ற முடிவை ஆணாகவே எடுத்துவிட்டான். பெண்ணறிவு என்பது பெரும்பேதைமைத்தே என்றும் சமூகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டது. எனவே இதையெல்லாம் புறந்தள்ளி சங்ககால பெண்பாற் புலவர்களும் ஆண்களுக்கு நிகராக இலக்கியங்களைச் சமைத்தனர் என்பதை நாம் கண்ணுற முடிகிறது. இந்த ஆய்வுரையில் இரண்டு அடிகளாகிய திருக்குறளை ஓரடியாகிய ஔவையின் ஆத்தி சூடியும் கொன்றை வேந்தனும் எவ்வாறு விஞ்சி நிற்கிறது என்பதை இங்கே ஆய்ந்து நோக்கலாம்.*

*சங்கம் தொடங்கி இக்காலம்வரை பெண்ணெழுதுவதை ஆண்களால் தடுக்கவே முடிந்ததில்லை. அவர்களின் எழுத்தும் காட்டாறு போன்றவை. அதனால் ஆண்கள் வாயடைத்து நின்ற நிலையைக் கண்ணுறுகிறோம். தொடர்ச்சியாக ஔவையார், காரைக்கால் அம்மையார், ஆண்டாள் போன்றோர் வீரியமிக்க படைப்புகளால் பல்லாண்டு காலமாக இலக்கிய உலகை ஆளுமை செய்துகொண்டு தன்னுடைய பேராற்றலைத் தங்களின் இலக்கியங்களில் மிக வலுவாகப் பதிவு செய்துள்ளனர். ஆண்களைப் போல ஒரு அதிகாரப் போக்கு இல்லாமல் இயல்பாகவே உலகத்து இயற்கையோடு இணைந்த உவமைகளையும் வாழ்க்கையோடு மிக மிக நெருங்கிய செய்திகளையும் அவர்கள் இலக்கியங்களிலே நாம் காண முடிகின்றது.*

அவ்வாறு பெண்கள் படைத்த இலக்கியங்கள் ஆண்கள் படைத்த இலக்கியங்களை விட எவ்வாறு மிகச் சிறந்தது, ஆண்களை விடப் பெண்கள் மிகச்சிறந்த படைப்பாளிகள், சொல்ல வந்ததை மிகச் சுருக்கமாகவும் கருத்தாழ மிக்கதாகவும் சமூகத்தோடு மிக இணக்கமான தொடர்புள்ளதாகவும்அவர்தம்இலக்கியங்களை வாழ்வியலோடு தொடர்புபடுத்தி மிக அருமையாகத் தங்களுடையஇலக்கியங்களில்பதிவுசெய்துள்ளனர் என்பதை இந்த ஆய்வுக் கட்டுரை பதிவு செய்ய முனைகின்றது. நாளும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என்பார்கள். அதை நாம் மிகை என்று கூறுவதற்கு இல்லை.. ஆனால் ஔவையார் படைத்த ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் எவ்விதத்திலும் ஆண்கள் படைத்த இலக்கியங்களுக்கு இளைத்தவை அல்ல என்பதை இங்கே இந்தக் கட்டுரை நிறுவ முனைகின்றது.

திருக்குறள் இரண்டு அடிகளை உடைய வெண்பா வடிவினது. மிகச்சிறந்த கருத்தாழமிக்கது. உலகில் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகிறது. பொய்யா மொழி, தமிழர் வேதம், வாயுரை வாழ்த்து ஆகிய தொடர்கள் திருக்குறளின் உண்மைத் தன்மையை மெய்ப்பிக்கின்றது. பொதுவாக வள்ளுவர் சமூக நீதி, மக்களாட்சி, பொருளாதாரச் சிறப்பு, பாதுகாப்பு, குடிமக்களைக் காத்தல் இவற்றையெல்லாம் ஆண்களை முன் வைத்தே தங்களுடைய கருத்துக்களை முன் வைத்துள்ளார். ஆனால் அந்தக் கருத்துக்கள் ஒரு ஆணாதிக்க முனைப்பிலே இருப்பதை நாம் பரவலாகக் கண்ணுற முடிகிறது. ஆனால் ஔவையார் ஒரே வரியில் அல்லது சில சொற்களில் உலகத் தத்துவங்களை, உலக நீதிகளைச் சமூக நெறிகளை மிகச் சரியாகச் சொல்ல முடியும் என்று தம்முடைய ஆத்திச்சூடி மற்றும் கொன்றைவேந்தன் நூலிலே பதிவு செய்திருக்கின்றார். அதை நாம் இப்பொழுது ஒவ்வொன்றாக ஆய்ந்து நோக்கலாம்.

***ஔவையார் அறம் செய்ய விரும்பு (ஆ.சூ-1)*** என்று கூறுகின்றார். அதாவது பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்று கூறுகின்றார்.ஆனால் வள்ளுவர் அறம் செய்தால்தான் மனிதன். அறம் செய்து வாழ்ந்தால்தான் சமூகம் மனிதனாக ஏற்றுக் கொள்ளும்.. இந்த உலகம் அறம் செய்வதற்கென்றே உருவாக்கப்பட்டது. அறம் செய்யவில்லை என்றால் இந்த மண்ணிலே வாழ்ந்தும் பயனில்லை என்று மனிதரை அறமனிதராகவே வாழ வேண்டுமென வலிந்து தம் கருத்தைக் கூறுகின்றார். அதையே ஔவை அறம் செய்ய விரும்பு அதாவது நீ பிறருக்கு உதவி செய்ய ஆசைப்படு என்று சொல்லும்போது மனிதன் உறுதியாக அறந்தான் செய்ய வேண்டும் என்று எவ்விடத்தும் அவர் வலியுறுத்தவில்லை. இந்த உலகம் தோன்றிய நாள்தொட்டு இன்று வரை ஒருவர், தானே உழைத்து அதில் வரும் வருமானத்தைக் கொண்டு உழைத்து உண்ண வேண்டும். அப்படி உழைத்துக் உண்டால் யாரும் பிறரிடம் கையேந்த வேண்டிய அவசியமில்லை. பிறர் கொடுத்து நாம் பெறவேண்டிய தேவையும் ஏற்படாது. அதனால் நம் தேவைக்குப் போக மீதி இருப்பதை நாம் உதவி செய்யலாம். மனம் இருந்தால் மட்டுமே உதவி செய்ய முன் வரலாம். அதில் தவறொன்றுமில்லை.

அதனால் தான் ஔவையார் அறம் செய்ய ஆசைப்படு அல்லது விருப்பம் கொள். நீ அறம் செய்துதான் ஆக வேண்டும் என்ற ஒரு கட்டாயம் இல்லை. முடிந்தால் பிறருக்கு உதவி செய். இல்லையென்றால் அவர்களுக்குத் தீமை செய்யாமல் இரு என்ற பொருளில் அவர் இந்த அறம் செய்ய விரும்பு என்ற ஒரு வரி பாவை மிக அழகாகப் பதிவு செய்கின்றார். ஆனால் வள்ளுவர்

***வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்***
***வாழ்நாள் வழி அடைக்கும் கல் (குறள்-38)***

என்றும் அறத்தான் வருவதே இன்பம் என்றும் கூறிச்சென்றிருக்கின்றார். அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என்றும் கூறியிருக்கின்றார். இங்கே அவர் பொருள் உள்ளவர்கள் மற்றவர்களுக்குக் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்ற ஒரு கட்டளை அல்லது அதிகாரத்தன்மையோடு கூறுவதை அறிய முடிகின்றது.

அடுத்துவைவையார்ஆறுவதுசினம்(ஆ.சூ-2) என்று கூறி இருக்கின்றார். கோபம் என்பது

எல்லோருக்கும் இயல்பாக மனதில் எழுவது அந்தக் கோபத்தை நாம் அடக்கிக்கொள்ள வேண்டும் என்றுதான் ஔவையார் கூறியிருக்கின்றார். இயல்பான கோபத்தை நாம் அடக்கிக்கொள்ள வேண்டும். அப்படி அடக்கிக் கொண்டாலே நாம் நம்மைத் தீமையிலிருந்து காத்துக்கொள்ளலாம் என்று கூறுகின்றார். ஆனால் வள்ளுவர் தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால் தன்னையே கொல்லும் சினம் (ஆ.சூ- 305 )என்று கூறி மனிதனை அச்சுறுத்துகின்றார். இந்த அச்சம் என்பது ஆண் பெண்ணை அச்சுறுத்துவது போலவும் ஒரு முதலாளி தொழிலாளியை அச்சுறுத்துவது போலவும் மேட்டமைத் தன்மையில் உள்ளது எண்ணங்கொள்ளத் தக்கது. இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை என்று கூறி கோபம் கொள்பவர் செத்தவர்களாகவே மதிக்கப்படுவார்கள் என்று கோபம்கொள்ளும் மனிதரைக் கீழ் நிலைக்கு இறக்கிவிடுகிறார். .

அடுத்து இயல்வது கரவேல் (ஆ.சூ-3) என்று கூறுகின்றார். உங்களால் செய்ய முடிந்த உதவியையோ, கொடுக்க முடிந்த பொருளையோ மறைக்காமல் பிறருக்குக் கொடுக்க வேண்டும்; அதாவது, உங்களால் இயன்றதைச் செய்யத் தயங்கக் கூடாது எனக் கூறுகின்றார். மனிதர்கள் தான்மட்டும் தனித்து வாழ்ந்துவிட முடியாது. ஒருவரை ஒருவர் சார்ந்துதான் வாழ வேண்டும். மனிதரிடத்திலே ஒரு நல்ல எண்ணம் இருக்க வேண்டும். இல்லையென்றால் இல்லை என்றும் உள்ளது என்றால் உள்ளது என்றும் கூற வேண்டும். எதுவுமே இல்லை என்று சொன்னால் அது மிகவும் நேர்மையற்ற செயல். ஆகவே ஔவை வாழக்கையின் உண்மை இயல்போடு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று கூறுகின்றார். ஆனால் வள்ளுவர்,

***சாதலின் இன்னாதது இல்லை இனிததூஉம்***
***ஈதல் இயையா கடை (குறள்-230)***

என்று கூறுகின்றார். இறத்தலின் இன்னாது மன்ற நிரம்பிய தாமே தமிழர் உணல் (குறள்-290) என நாம் பிறருக்காகக் கொடுத்து வாழும் நிலை வாய்க்கவில்லை என்றால் இறப்பதே இனிமையானது என்று கூறுகின்றார். அதிகாரம் இருப்பவர், பணம் இருப்பவர் பிறருக்குக் கொடுத்துப் புகழைப் பெற்றுவிட்டால் இல்லாதவர் அந்தப் புகழைப் பெறுவது எங்ஙனம்? இவற்றையெல்லாம் நாம் ஆய்வு செய்ய வேண்டியநிலையிலே இருக்கின்றோம். அதனால் ஔவையார் இயல்வது கரவேல் என்று மிக அற்புதமாக மனித இயங்கியலோடு மிகப் பொருத்தமான கருத்தைப் பதிவு செய்வதை நாம் கண்ணுற முடிகின்றது.

அடுத்து ஈவது விலக்கேல்(ஆ.சூ-4) அதாவது ஒருவர் பிறருக்குக் கொடுப்பதைத் தடுக்காதே அல்லது தானம் செய்வதைத் தடுக்காதே நம்மால் ஒருவருக்குக் கொடுக்க முடியவில்லை. ஆனால் வேறொருவர் பிறருக்குக் கொடுப்பதைப் பார்த்து நாம் ஏன் பொறாமைப்பட்டு அதைத் தடுக்க வேண்டும். அவர்களுக்குக் கொடுக்க முடியாத எதையும் கொடுக்க வேண்டும் என மிக வலிந்து சொல்லாமல் மனித இயல்பிலே அவர் கூறுகின்றார்.

ஆனால் வள்ளுவர் ஈகை என்ற அதிகாரத்திலே ஏற்கனவே சொன்ன, ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு என்று கூறுகின்றார். எனவே பிறருக்குக் கொடுத்து வாழ முடியவில்லை என்றால் அது மிகவும் வருந்தத்தக்கது என்று மனிதர்களைக் குற்ற உணர்வுக்கு ஆளாக்குகிறார்.. மேலும் கொடுப்பது

***அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்***
***பதூஉம் இன்றிக் கெடும் (குறள்-166)***

எனச் சாபம் இடுகின்றார். இங்கே ஔவையார் வலிந்து சொல்லாமல் பிறருக்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும். அதை நாம் விலக்கிக் கொள்ளக்கூடாது என்று ஒரு எச்சத்தை அவர் முன் நிறுத்துகின்றார். உதவி செய்துதான் ஆக வேண்டும் என்ற ஒரு கட்டாயத்தை அவர் எவ்விடத்திலுமே பதிவு செய்ததில்லை. மனித இனம் தோன்றிய பொழுதே தானே சிந்தித்து, தானே தன் உணவுகளை உருவாக்கி, தானே தன் வருங்காலத்திற்குச் சேர்த்துப் பழகிக்

கொண்டவர்கள். அதைப் பிறருக்கு முடிந்தால் கொடுக்கலாம். மனம் இல்லை என்றால் கொடுக்காமல் இருக்கலாம் அதனால் தவறு இல்லை. இதைத்தான் ஔவையார் மிக அழகாகப் பதிவு செய்கிறார்.

உடையது விளம்பேல் (ஆ.சூ-5) என்ற தொடர் தன்னிடமுள்ள செல்வத்தையும், அறிவையும், ஆற்றலையும் பிறரிடம் சொல்லிப் பெருமை கொள்ளக்கூடாது என்ற பொருளைத் தருகிறது. மேலும் மிகைபடக் கூறேல் என்றும் ஔவை கூறுகின்றார். இது நம்மிடம் உள்ள செல்வமானாலும் சரி அறிவாக இருந்தாலும் சரி நம்மை அதிகமாக வெளிப்படுத்திக் கொள்ளக் கூடாது. பிறர் நம்மை அறிவாளி என்று கூற வேண்டும் என்ற பொருளில் கூறுகின்றார். இங்கேயும் மிக அழகாகப் போகிற போக்கிலே அறிவுரை சொல்லிவிட்டுச் செல்கின்றார். மேலும் தம்மை அறிவாளி என்று வெளிப்படுத்து பவர்களை வசைபாடவில்லை. ஆனால் வள்ளுவர் முட்டாள்தனம் என்பது ஒருவர் தன்னைத்தானே அறிவாளி என்று கூறிக் கொள்ளுகின்ற அறிவின்மையாகும் என்று கூறுகின்றார். அதாவது செருக்கு என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றார். வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மம் உடையம்யாம் என்னும் செருக்கு (குறள்- 844) என்கிறார்.

அடுத்து ஊக்கமது கைவிடேல்(ஆ.சூ-6) என்றும் ஊக்கமுடைமை ஆக்கத்திற்கு அழகு (கொ .வே- 6) என்றும் கூறுகின்றார். ஊக்கம் ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்கு வழிவகுக்கும் படிக்கற்களாகும் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் ஒரு சில மனிதர்களைப் பொறுத்தவரை சிலருக்கு ஊக்கமிருக்கும், சிலருக்கு ஊக்கம் இருக்காது சிலரிடம் முயற்சி இருக்கும் சிலரிடம் முயற்சி இருக்காது. சிலரிடம் உழைப்பு இருக்கும், சிலரிடம் உழைப்பு இருக்காது. இவையெல்லாம் சேர்ந்ததுதான் உலகம். அதனால்தான் அவர் ஊக்கத்தைக் கைவிடாதீர்கள் என்றும் ஊக்கமுடையவர்களுக்கும் அது பொருந்தும் ஊக்கம் இல்லாதவர்களுக்கும் அது பொருந்தும். இப்படி இயல்பாக அவர் கூறிச் சென்றிருக்கின்றார். ஆனால் வள்ளுவர்.

**உரமொருவருக்கு உள்ள வெறுக்கை அஃ திலார் மரம் மக்க ளாதலே வேறு (குறள்-600)**

என்று பதிவு செய்து ஊக்கம் இல்லாதவரை மரத்திற்குச் சமமாகக் கூறிச் சொல்கின்றார். எனவே அவர் மனிதர்களை அச்சுறுத்தும் அல்லது இழிவுபடுத்தும் போக்கையே தொடர்ந்து செய்து வருகின்றார்

**எண்ணெழுத்து இகழேல் (ஆ.சூ-7)**

என்றும் எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் (கொ.வே.-7) கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி (கொ.வே. - 22) அஃகமும் காசும் சிக்கெனத் தேடு (கொ.வே.-13) என்பது நம்முடைய ஔவயின் அமுதமொழிகள். படிப்பவர்களைப் படிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. நன்கு படிக்கட்டும். அவை நம் இரு கண்களைப் போன்றவை என்று மிக இயல்பாக வலியுறுத்துகின்றார். ஆனால் வள்ளுவர் கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றையவை என்று கூறுகின்றார். அவர் இலக்கியம் எழுதிய காலம் கல்வி எல்லோருக்கும் பரவலாக்கப்படாமல் இருந்த காலம். இதை வைத்துத்தான் அவர் கூறி இருக்கின்றார் என்றாலும் கூட, நாம் நன்கு படித்தவர்கள் நாம்தான் மனிதர்கள் படிக்காதவர்கள் விலங்கு நிலைகளில் இருப்பவர்கள், படிக்காதவர்கள் மனிதர்களே அல்லர், படித்தால் தான் எல்லா நாடும் தன் நாடாகும் எல்லா ஊரும் தன் ஊராகும் என்ற அதிகாரத் தளத்தில் வள்ளுவர் தன்னுடைய குறட்பாவைப் பதிவு செய்கின்றார்.

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன் சாந்தனையும் கல்லாத வாறு (குறள்-397)**

என்றும் விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனை யவர் (குறள் - 410 நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே கல்லார்கண் பட்ட திரு (குறள் 408) என்றெல்லாம் கூறி மனிதரோடு மனிதராக வாழும் இயல்பைக் கல்லாதவர்கள் பெறத் தகுதியற்றவர், களர் நிலத்தைப் போன்றவர், அறிவு மிக அழகாக இருந்தாலும் படிப்பறிவு

இல்லை என்றால் அவன் மிகவும் பழிக்கப்படுவான், கற்றவர் முன்பு கல்லாதவன் எதையுமே சொல்லக்கூடாது எனக் கல்வி அறிவு இல்லாதவரை வசை பாடுகின்றார். ஆனால் ஔவை எண்ணெழுத்து இகழேல் என்றும் எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் எனக் கூறி எல்லாவற்றையும் உள்ளடக்கியவாறு மிக அற்புதமாகப் பதிவு செய்துள்ளார். யாரையும் வசைபாட வில்லை. ஒரு வாசகம் சொன்னாலும் திருவாசகம் என்று சொல்வார்களே அந்த நிலையிலே ஔவையார் கூறிச் செல்வதை நம்மால் கண்முற முடிகிறது.

**ஏற்பது இகழ்ச்சி (ஆ.சூ- 8)**

என்ற ஒரு அற்புதமான ஒரு வாசகத்தை ஔவையார் பதிவு செய்கிறார். பிறருக்குக் கொடுத்து வாழ வேண்டும். என்பதெல்லாம் சரிதான் அவர்கள் கொடுப்பதால் உயர்ந்தவர்கள் ஆகிவிடுகிறார்கள். ஆனால் நாம் அதை வாங்குவதால் மிகவும் இகழ்ச்சி உடையவர்களாக மாறிவிடுகிறோம். எனவே ஏற்பது இகழச்சியாகும் என்று நினைத்து நாம் நன்கு உழைத்து அதில் வரும் உணவைக் கொண்டே நாம் உண்ண வேண்டும். தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது(கொ.வே.45)என்றும் போனகம் என்பது தானுழ்ந்து உண்டல் (கொ.வே-69) என்றும், பூமி திருத்தி உண் என்றும் மிக அற்புதமாகப் பதிவு செய்கின்றார் . ஏற்பது இகழ்ச்சி என்று மனிதர்களைப் பலவாறு அவர் சிந்திக்கத் தூண்டுகின்றார். உணவு என்றாலே அதை நாம் தான் உருவாக்கி உண்ண வேண்டும் உழவுத் தொழில் செய்து உண்ண வேண்டும் பிறரிடம் யாசிக்கக் கூடாது என உழைப்பின் உண்மை நிலையை விளக்கி மக்களை இயல்பாகச் சிந்திக்கத் தூண்டுகிறார் ஔவை.

ஆனால் வள்ளுவர் பிறருக்குக் கொடுக் காதவர்களை மிக மிக மோசமானவர்கள்: வாழத் தகுதியற்றவர்கள்: மரத்திற்குச் சமமானவர்கள்: விலங்குகளுக்கு சமமானவர்கள் என்றெல்லாம் வசைமொழிகின்றார். அதைப்போலவே யாசித்து வாழ்பவர்களையும் பலவாறு வசைபாடி நிற்பதை நாம் கண்ணுற முடிகின்றது. இரப்பான் வெகுளாமை வேண்டும் என்றும் இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகு இயற்றியான் (குறள்- 1062) என்றும். ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்தத தில் (குறள்-1066) என்றும் கூறுகின்றார். இரப்பவர் அதாவது ஏற்பவர் மிக மிக இழிவானவர் என்பதை மிக அதிகமாக முன்வைக்கின்றார். அறம்சாரா நல்குரவு ஈன்ற தாயானும் பிறன்போல் நோக்கப்படும். தன் நாவிற்கு நீர் என்று இரப்பது கூட மிகவும் இழிவு என்று கூறுகின்றார். ஆனால் அவ்வையார் ஏற்பது இகழ்ச்சி என்ற இரு சொற்களைக் கையாண்டு, மனநிலைகளைப் பொறுத்து பிச்சை ஏற்றுக் கொள்வதும் விலக்கிக் கொள்வதும் அவரவர்களின் பாடு என்று கூறுகின்றார்.

**ஐயம் இட்டு உண் (ஆ.சூ.9)**

இந்த இடத்தில் கூட பிறருக்குப் பிச்சை இட்ட பிறகு நீ உண்ண வேண்டும் எனக் கூறுகின்றார். எதையும் வலிந்து சொல்லவில்லை. அந்தக் காலத்திலே துறவிகள், முதியவர்கள் முடியாதவர்கள், நோய்வாய்ப் பட்டவர்கள் போன்றோர் உழைத்து உண்ண முடியாத நிலையில் இருக்கும்போது அவர்களுக்கு ஐயம் இட்டு உண் என்று சொல்லுகின்றார் ஆனால் வள்ளுவர்,

தாளாற்றி தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃதொருவன் விற்றுக்கோள் தக்கது உடைத்து என முன் வைக்கின்றார்.

பிறருக்குக் கொடுத்து ஒருவர் வாழ்விலே மிகவும் கெட்டுப் போய்விட்டார் என்றால் அந்த கேட்டை அவரை விற்றாவது வாங்கிக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகின்றார். மிக மிக அழுத்தமாக வலிந்து இங்கே ஒப்புரவை வள்ளுவர் பதிவு செய்கின்றார் ஆனால் அவ்வையார் ஒப்புரவு ஒழுகு என்ற இரு சொற்களில் அடக்கி மிக மிக அழகாகவும் நேர்த்தியாகவும் கூறி விடுகின்றார். மிக்க செல்வந்தர்கள் கட்டாயமாகப் பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நீதி இல்லை அவர்களின் முன்னோர்கள் உழைத்துச் சேர்த்து வைத்த சொத்தாகக் கூட இருக்கலாம். எனவே

முடிந்தால் அந்தப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள். இல்லை என்றால் நீ உழைத்தாவது சாப்பிட்டு உன் மானத்தைக் காப்பாற்றிக் கொள் என்றுதான் ஔவை முன்மொழிகின்றார்

**ஔவியம் பேசேல் (ஆ.சூ- 12)**

அதாவது கோள் சொல்லாதே என்று கூறி நிறுத்தி விடுகின்றார். காற்றும் தீயும் ஒன்று சேர்ந்தால் எவ்வாறு அது பற்றிக்கொண்டு எறியுமோ அதுபோல மனிதர்களின் மனம் கோள் சொல்வதால் பற்றி எரியும் என்று அழகாகக் கூறிச் செல்கிறார்.ஆனால் வள்ளுவர், புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல் அறங்கூறும் ஆக்கம் (குறள் - 183) தரும் எனக் கோள் சொல்லி வாழ்வதைவிட இறப்பதே மேலானது என்று வலிந்து கூறுகின்றார்.

ஆகவே இரண்டு அடிகளை உடைய திருக்குறளை விட ஓரடியை உடைய ஔவையாரின் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் ஆகியன சொற்சுருக்கம், நடைமுறை உண்மை, அனைத்து மக்களுக்கும் மிக நேரடி நெருக்கம் கொண்டதாகவும் இருப்பதை இங்கே வள்ளுவத் திருக்குறள்களோடு ஒப்பிட்டு அதன்வழி பெண்ணின் ஆளுமைத்திறன்கள் வெளிக் கொணரப்பட்டன.

**துணைநூல் பட்டியல்**

1. அகத்தியலிங்கம், ச, திருக்குறள் ஒரு, சமூகவியல் பார்வை, மணிவாசகர், பதிப்பகம், சிதம்பரம், 2005.
2. அப்பாதுரை, க, திருக்குறள் ஒரு சமூக நோக்கு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1983.
3. கீதா, வா, திருக்குறளில் பெண்ணிய நோக்கு, காலச்சுவடு பதிப்பகம், 1997.
4. தமிழண்ணல், இந்திய இலக்கியச் சிற்பிகள் - ஔவையார், சாகித்ய அகாதமி, 1998
5. சுப்பராயன், ச, வள்ளுவமும் சமூக நீதியும், பாரி நிலையம், சென்னை,1972.
6. புலியூர் கேசிகன், திருக்குறள் புதிய உரை, பூம்புகார் பதிப்பகம், 2010.
7. வேங்கட சாமி நாட்டார், ந.மு, நீதி நூல்கள் மாணவர் பதிப்பு, சென்னை, 2004.